என்ற கிராமத்தில் உள்ளது. இச்சங்கத்திலிருந்து பீமகுளம் கிராமம் 3 கி.மீ. தொலைவிலும், நாயக்கனூர் கிராமம் 2 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மேற்படி இரண்டு கிராம உறுப்பினர்களுக்கு, சத்திரம் கிளையில் நகைக் கடன் மற்றும் சேமிப்புக் கணக்கு வசதி மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருவதால், இனி வருங்காலங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, சத்திரம் கிளையிலேயே பயிர்க் கடன்களும் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

278—

நெல் கொள்முதல் நிலையம்

***5479—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி தாலுகா, செம்புலிவரம் வட்ட செயல்முறைக் கிடங்கில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, நெல் வரத்து இல்லாத காரணத்தால் அந்த நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்டுவிட்டது. எனவே, அங்கு அரசு நேரடி நெல்

2015 செப்டம்பர் 16]

கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். ** உலக நாடுகள் எல்லாம் வியக்கும் வண்ணம் மக்களால் நான், மக்களுக்காக நான். . .*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இல்லாமல் துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பொன். ராஜா: *உலக நாடுகள் எல்லாம் வியக்கும்வண்ணம் மக்களால் நான், மக்களுக்காக நான். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் குற்றச்சாட்டு இல்லாமல் பேசச் சொல்லிவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பொன். ராஜா: *அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை தனக்கே உரித்தாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குத் திட்டம், 2023-ஐ நிறைவேற்றும் வகையிலே, மாட்சிமை பொருந்திய ஆட்சி புரிந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், உட்காருங்கள். குற்றச்சாட்டு இல்லாமல் பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் சொன்ன உடனேயே நான் சொல்லிவிட்டேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. பொன். ராஜா: *அதற்கு சாட்சியாக உலக நாடுகள் வியக்கும் வகையிலே, உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, ரூ.2 கோடியே 42 இலட்சத்து 160 கோடியினை முதலீடாகப் பெற்று, சரித்திர சாதனை படைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு அருகில் உள்ள. . . (குறுக்கீடுகள்)*

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. செங்குட்டுவன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என்னவென்று பார்க்கலாம். திரு. டி. செங்குட்டுவன், உட்காருங்கள். நீங்கள் சொன்ன உடனே குற்றச்சாட்டு இல்லாமல் பேசுமாறு சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன உடனே, மாண்புமிகு உறுப்பினரை குற்றச்சாட்டு இல்லாமல் பேசுமாறு சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு அருகில் உள்ள செம்புலிவரம் பகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற நெல் கொள்முதல் நிலையம், சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் பொன்னேரியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. டி. செங்குட்டுவன்: *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் பார்க்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அது என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பொன். ராஜா: *ஆகையால், அங்கிருக்கின்ற விவசாயப் பெருமக்கள் தொலைதூரம் சென்று, தங்களுடைய நெல்லை விற்பனை செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். (குறுக்கீடுகள்)*

2015 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் வற்புறுத்தக்கூடாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் உட்காருங்கள். நான் பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், கேள்வி முடியட்டும்.

திரு. பொன். ராஜா: ஆகையால், பொன்னேரி தொகுதியின் மையப் பகுதியான பொன்னேரியில் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்திலே நெல் கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அனுமதி பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி நேரத்தில் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகாவில் கடந்த 4 வருடங்களில் திறக்கப்பட்ட நேரடிக் கொள்முதல் நிலையத்திற்கு நெல் வரத்து ஏதும் இல்லை. கடந்த 2 வருடங்களாக இம்மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து அறவே இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளின் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்களை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே திறந்துகொள்ளலாம் என உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், நடப்புப் பருவத்தில் 1,722 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் 15 இலட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கும் இல்லாத அளவில் அதற்கு ஊக்கத் தொகையாக மட்டும், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், ரூ.99,45,60,200/-ஐ வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத்

[2015 செப்டம்பர் 16

தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள் கேட்டுக்கொண்ட அந்த இடத்தில் ஆய்வுகளுக்குப் பின்னால் நெல் வரத்து இருக்குமேயானால், நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய ஆனைமலை, உடையகுளம், கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் போன்ற பகுதிகளில் சுமார் 2,000 ஹெக்டேருக்குமேல் நெல் பயிர் சாகுபடி செய்யப்படுகின்றது. நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விவசாயிகள் மத்தியிலே தொடர்ந்து எழுந்துகொண்டு வருகின்றது. எனவே, ஆனைமலை அல்லது கோட்டூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை அல்லது கோட்டூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் தேவையென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நெல் வரத்து இருக்குமாயின், உறுதியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறக்கும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 279, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*